# சிறுவர் கவி நயம்

இரசிகமணி
கனக. செந்திநாதன்

வெளியீடு :
சன்மார்க்கசபை, குரும்பசிட்டி
1993

# சிறுவர் கவி நயம்

இரசிகமணி
கனக. செந்திநாதன்

வெளியீடு :
சன்மார்க்கசபை, குரும்பசிட்டி
1993

**Title :**

SIRUVAR KAVI NAYAM
Appreciation on Children's Poems

**Author :**

Rasikamani Kanaka Senthinathan

**Publishers :**

Sanmarka Sabha
Kurumbasiddy,
Tellippalai.

**Printers :**

Mahathma Printers
Erlalai

**Edition :**

First 1993 January

**Price :** **25/-**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர்
பேராசிரியர் அ சண்முகதாஸ் அவர்கள்
வழங்கிய

# அணிந்துரை

இலக்கியம் முதற்கண் சுவைத்தற்குரியது. பின்னர்தான் அது வரலாற்றுக்குக் கருவூலமாக அமைகின்றதா அல்லது அமைய வில்லையா என்று நோக்கவேண்டும். இலக்கியத்தின் சுவைப் பயன்களுக்கு முதன்மை வழங்காது சமூகவியல், மானிடவியல் போன்றனவற்றுக்குக் கருவியாக அதனைக் கருதும் போக்கு இந் நாட்களிலே பெருகி வருகின்றது. இலக்கியச் சுவை மாணவர்க ளிடையே அருகி வருகின்றது. இவ் வேளையிலே இரசிகமணி கனக செந்திநாதனை நினைவுகூருவது இன்றியமையாதது. குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் காலத்தின் தேவை உணர்ந்து இரசிக மணியின் **சிறுவர் கவிநயம்** என்னும் இந்நூலை வெளியிடுகின்றனர்.

இடைநிலைப் பள்ளியிலே பயிலும் மாணவர்களுக்கு எளிமை யான தமிழ்க் கவிதைகளை அறிமுகம் செய்து, அவற்றைச் சுவைப் பதற்கு ஆற்றுப்படுத்துவது இன்றியமையாததாகும். **சிறுவர் கவிநயம்** என்னும் இந் நூல் அத்தகைய பணிக்கு நன்கு துணைபுரியக் கூடியது. இளமைக் காலத்திலே சுவையுடன் கற்பிக்கப்படும் பாடல்கள் எம்முடைய மனத்திலே ஆழப் பதிந்து இன்றுவரை நினைவிலே நிற்கும் தனிப்பட்ட பட்டறிவின் அடிப்படையிலே இந் நூலை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் நோக்குகிறேன். இள நெஞ்சங் களிலே இந் நூலிலே சுவைபட விளக்கம் பெறும் பாடல்கள் இடம் பிடிக்குமென நம்புகிறேன்.

இந்நூல் காலத்தின் தேவைகருதியது என முன்னர்க் குறிப் பிட்டேன். அதனை வலியுறுத்துவதற்கு இந் நூலிலே இடம்பெறும் ''காற்று மாமா கருணை செய்குவீர்'' என்னும் பகுதி சான்று கின்றது குப்பி விளக்கொன்று தன்னை அணைத்துவிட வேண்டா மென்று காற்றை வேண்டுவதாக அமையும் பாடல்களுக்கு இரசிக மணி சிறப்பான விளக்கம் தருகிறார்.

> ''ஓர் ஏழையின் குடிசையில் எரிந்துகொண்டிருந்த ஒரு சிறிய 'குப்பி' விளக்கு காற்றுடன் பேசியது. பேசியதா? இல்லை மன்றாடியது ..........................................
> சின்னஞ்சிறு குடிசை இது. நான் அதிக நேரம் எரியக்கூடப் போவதில்லை. எண்ணெய் வாங்க இந்த வீட்டு ஏழைப்பெண்

ணிடம் காசுகூட இல்லை. கொஞ்ச நேரந்தான் எரியப்போகி றேன். என் பொன்னிறத்துச் சுடரினாலே சிறிது நேரம் இக் குடிசையைப் பொலியச் செய்வதுகூட உனக்குப் பிடிக்க வில்லையா? போகட்டும். எனக்காக வேண்டாம். அந்த ஏழைச் சிறுவனைப் பார். சின்னஞ்சிறு பையன். ஏழையாய் இருந்தாலும் படிப்பில் எவ்வளவு ஊக்கம். படித்து முன்னேற வேண்டும் என்று எவ்வளவு ஆர்வம். அவனுக்காகவாவது என்னை அணைத்து விடாதே என்று விளக்கு மீண்டும் மன்றாடுகின்றது.

''ஏழைச் சிறுவன் என்னை நம்பிப் பாடம் படிக்கிறான்
ஏழும் மூன்றும் பத்து என்று எழுதிக் கூட்டுறான்''

இப்பாடற் பொருளும் விளக்கமும் இன்றைய சூழ்நிலைக்கும் பொருத்தமாயுள்ளன. எம்முடைய எத்தனை பிள்ளைகள் 'குப்பி' விளக்குடன் போராடுகிறார்கள். எத்தனை 'குப்பி' விளக்குகள் காற்றுடன் போராடுகின்றன. கவிஞர் கிருஷ்ண நம்பியின் பாடலும் இரசிகமணியின் விளக்கமும் இன்றைய இளம் மனங்களை ஈர்க்க வல்லன.

நூலின் முதற் பகுதியாகிய ''காய்கள் கட்டிய வெருளி'' பிள்ளைகளுக்கு ஆர்வத்தை ஊட்ட வல்லது. இக் கவிதையைப் பாடிய கவிஞர் பண்டிதர் க. சச்சிதானந்தன் எப்பொழுதுமே புதுமையாக எண்ணுபவர். தமக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கருதிய காய்கள் தம்மையும் தம்மினத்தையும் பாதுகாப்பதற்குத் தாமே வழிதேடுகின்றன. ஒற்றுமை என்னும் உயர் உணர்வை அடிப்படையாக இப் பாடல் கொண்டமையினும், காய்களின் கோலங்கள் காணும் குழந்தைகளின் மனத்திலே எழச்செய்யும் குதூகல உணர்வு மிக உயர்ந்தது. கவிஞரைப்பற்றி இரசிகமணி அவர்கள் ''தமிழ் நாட்டில்தான் எல்லாம் உள்ளன என்று கூறும் நம்மவர்கள் சச்சியின் கவிதைகளைக் கண்டாவது கண்திறக்கவேண்டும்'' என்று கூறுவது சிந்தனைக்குரியது.

சிறுவர்க்குரிய பன்னிரண்டு பாடல்களுக்கு இரசிகமணி எழுதியுள்ள கவிநயம் இந்நூலிலே பிரசுரமாகின்றது. கவிநயம் வெறுமனே அறிவியல் ரீதியான கணக்குப் பார்த்தல் அல்ல. அது அழகுணர்வுடன் தொடர்புடையது. சிறுவர் மனத்திலே அழகுணர்வை வளர்ப்பதற்குக் கவிதைநயப் பாடமும் துணைபுரியும். இந்நூல் இத்தகைய பணிக்கு உதவ வல்லது. இந்நூலை இன்று சன்மார்க்க சபையினர் வெளியிடுவது காலத்தாற் செய்த பேருதவியாகும். கவிநயத்தை மாத்திரமன்றி இன்றைய சிறுவர்கள் கனக செந்திநாதனையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பினையும் இந்நூல் வழங்குகின்றது.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**

# காய்கள் கட்டிய வெருளி

அன்புள்ள தம்பி தங்கைகளே! நீங்கள் வெருளியாரைக் கண்டிருக்கிறீர்களா? உங்கள் அப்பா தோட்டத்தில் வெருளி கட்டி வைத்திருப்பார், அல்லது பக்கத்துத் தோட்டக்காரர் வெருளி கட்டி வைத்திருப்பார். நன்றாக வளர்ந்த கத்தரி, மிளகாய், புடோல் இவற்றை மாடு, ஆடுகள் சாப்பிடாமல் இருப்பதற்கு வெருளி கட்டி வைப்பார்கள். வைக்கோலில் மனித உருவம் போலச் செய்து, தலைக்கு ஒரு முட்டியை வைத்து, சுண்ணாம்பால் பற்களைக் கீறி, முறுக்காத மீசையைக் கறுப்பாக வரைந்து வெருளி ஆக்குவார்கள். பழைய சட்டையை மாட்டி சிறிய கட்டையை இடையில் சொருகி அழகுபடுத்துவார்கள். பூட்டிய வில்லும் குறிவைத்த அம்புமாக அவர் நிற்பார். சில இடங்களில் இந்த வெருளியாரைப் பார்க்க ஆனந்தமாக இருக்கும்.

புத்தூர் என்ற ஊரிலே கந்தன் என்ற கமக்காரன் இருந்தான். அவன் காய்கறித் தோட்டம் செய்து வாழ்ந்தான். அவன் கத்தரி, வெண்டி, மிளகாய், பூசினி முதலியவற்றை ஏராளமாக நட்டு காய்கறிகளைச் சுன்னாகம் சந்தையில் விற்றுக் குடும்பம் நடாத்தினான். அளவுக்குமீறி அவன் செய்தபடியால் தகுந்த பாதுகாப்புச் செய்ய அவனால் முடியவில்லை. ஆடு மாடுகள் விருப்பம்போலச் சிலநேரங்களில் உள்ளே புகுந்து காய்கனிகளைத் தின்று வந்தன.

காய்கனிகளுக்கு மிகத் துக்கம், கந்தன் தங்களைச் சரியாகப் பாதுகாக்காமல் அசட்டையாக இருக்கிறானே என்று அவை பெருமூச்சுவிட்டன. ஒரு நாள் அவை எல்லாம் கூட்டம் கூடின. நீற்றுப் பூசினிக்காயார் தலைமை வகித்தார். 'எங்கள் எசமானுக்கோ வேலை அதிகமாகிவிட்டது. எங்களை அவன் பாதுகாப்பதே இல்லை. ஒரு வெருளி கட்டிவைக்கக்கூட அவருக்கு நேரம் இல்லை. என்ன செய்வது? நாங்களே ஒரு வெருளி கட்டிப் பார்ப்போம்' என்று முடிவு கட்டின.

'வைக்கோல், முட்டி, சட்டை, தடி இவற்றிற்கு எங்கே போவது? வெருளி செய்ய இவை வேண்டாமா' என்று கேட்டது மிளகாய்.

'போ, போ, உனக்கொன்றும் தெரியாது. நாங்களே வெருளியாகப்போகிறோம்' என்றது பூசினி. அது அப்படிச் சொல்லிவிட்டுச் சும்மா இருக்கவில்லை. 'நான் வெருளியின் தலைபோல் இருக்கிறேன்' என்று சொல்லிவிட்டுத் தோட்டத்தின் வாசலில் நின்ற உயரமான கதிகாலில் போய் உட்கார்ந்து கொண்டது. அப்பால் காய்கள் எப்படியெல்லாம் வெருளியாயின என்பதைக் கவிதையிலே பாடுங்கள்.

கந்தன் செய்த தோட்டத்தில்
காய்க னிகள் அதிகமாம்
வந்து ஆடு மாடுகள்
வளர்ந்த வற்றைக் கடிக்குமாம்

காய்கள் ஒன்று கூடியே
காக்க வெருளி கட்டின
வாய்கள் திறந்து பேசின
வழி வகுத்துக் கொண்டன

சாம்பல் நீற்றுப் பூசினி
தலைக்கு வருவேன் என்றது
பாம்பு போன்ற புடலங்காய்
பக்கக் கைகள் என்றது

பாணை போன்ற பூசினி
பருத்த வயிறு என்றது
ஆனை மிள காய்களும்
அழகு மூக்காய் ஆயின

வெண்டிக் காய்கள் தாங்கள்தாம்
விரல்கள் என்று தொங்கின
நொண்டிக் கால்கள் ஆயின
நுனி வளர்ந்த கரும்புகள்

இப்படியாக, தக்காளிக் காய்கள் கன்னங்களாகவும் நனைந்தபயற்றங் காய்கள் நாலு மயிர்களாகவும் இருந்து வெருளியாக உருவாக்கினார்கள். தங்களைப் பார்த்துத் தாமே சிரித்துக் கொண்டார்கள்.

என்ன இருந்தாலும் மீசை இல்லாத வெருளியும், கண் இல்லாத வெருளியும் ஒரு வெருளியா? அதைக் கண்டு மாடு ஆடு பயந்து ஓடுமா? என்று குட்டிமிளகாய் முணுமுணுத்துக் கொண்டது. மற்றும் சில காய்கள் ஆம் ஆம் என்று சொல்லி, அதற்கு என்ன செய்வது? என்று யோசித்தன. அப்போது ஒருவர் தான் மீசைக்கு இருக்கிறேன் என்று முன்வந்தார். ஒருவர் கண்ணாக இருக்க ஒப்புக்கொண்டார். அவர்கள் யார்யார் என்பதைப் பாடலில் பாருங்கள்.

முறுக்கு மீசை இல்லையென்று
முணு முணுத்துக் கொள்ளவே
நறுக்கி வைத்த அறுகம்புல்
நானிருப்பேன் என்றது

கண்ணில் லாத வெருளியென்று
காய்கள் கவலை கொண்டன
அண்ணன் நாவற் பழவனார்
அதற்கு வந்து குந்தினார்.

இப்போது அந்தக் காய்கறிகளுக்கு மகா சந்தோஷம். உண்மையான மனிதர் காக்கும் வேலையை வெருளியார் செய்கிறார், வெருளியார் இல்லாத குறையை நானே வெருளியாகித் தீர்த்துக் கொண்டோம் என்று பேசிக்கொண்டன. என்றாலும் அவற்றிற்கு ஒரு சந்தேகம். ஆடு மாடுகள் தம்மைக் கண்டு காய்களால் ஆகிய வெருளியைக் கண்டு பயந்து ஓடுமா? என்பதுதான் அந்தச் சந்தேகம்.

விடிந்தது, வழமையாக உண்டு கொழுத்த மாடு ஒன்று கந்தன் தோட்டத்துக்குள் புக வந்தது; ஒரு நாளும் இல்லாத மாதிரி தோட்டத்தின் வாசலில் மனித உருவம் ஒன்று நிற்பதைக் கண்டு ஓட்டம் எடுத்தது. நாடு, காடு தாண்டி நாலுகாலில் ஓட்டம் எடுத்தது. காய்கள் தங்கள் வெற்றியைக் கண்டு ஒன்றையொன்று கட்டித் தழுவின.

மாடு வந்து பார்த்தது
மனிதன் மீசை கண்டது
நாடு காடு தாண்டியே
நாலு காலில் பாய்ந்தது.

காய்கள் தாமே உண்டாக்கிய இந்த வெருளிப் பாட்டைப் பாடியவர் கவிஞர் க. சச்சிதானந்தன் அவர்கள். பலாலி ஆசிரியர் கலாசாலைப் பேராசிரியர். எதை எழுதினாலும் புதுமையும் கற்பனையும் தோன்ற எழுதுவதில் வல்லவர். இவர் இப்படி எழுதியுள்ள கிழந்தைப் பாடல்கள் அநேகம் உள்ளன. தமிழ் நாட்டில் தான் எல்லாம் உள்ளன என்று கூறும் நம்மவர்கள் சச்சியின் கவிதைகளைக் கண்டாவது கண் திறக்கவேண்டும். அவரே தான் பாடிய ஐந்து குழந்தைப் பாடல்களை ஒரு பெரிய கூட்டத்தில் கூறிப் பரீக்ஷை செய்து பார்த்தார். குழந்தைகள் அடைந்த சந்தோஷத்தை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. எந்த வியாக்கியானமும் இல்லாமலே படிப்பிக்கலாம்.

# குப்பன் செய்த தப்பு

நீங்கள் உங்களை அறியாமலே எப்போதும் சிறு தவறுகளைச் செய்கிறீர்கள். பொய் சொல்லல், களவெடுத்தல், கொலை செய்தல், கள் குடித்தல் முதலியவை பெரும் பாவங்கள். அவற்றை நான் குறிப்பிடவில்லை. அவற்றை நாம் வாழ்நாளிற் செய்யவேகூடாது. நான் சொல்பவை சிறு தவறுகள். அவற்றைக்கூட நாம் செய்தல் கூடாது.

உங்கள் கையில் ஒரு கரித்துண்டு அகப்பட்டால் சுவர் முழுவதும் கீறுகிறீர்கள். சிறிய வெண்கட்டி அகப்பட்டால் கண்டகண்ட இடமெல்லாம் படம் வரைகிறீர்கள். புத்தகம் கொப்பிகளைக் கிழித்துக் கண்டபடி எறிகிறீர்கள். இவையெல்லாம் உங்கள் வீட்டை அசுத்தப் படுத்திவிடும் என்பதை நீங்கள் உணர்வதில்லை. இவற்றால் மற்றவர்களுக்குத் துன்பம் இல்லை என்றாலும் இவற்றைச் செய்யக்கூடாது.

மற்றவர்களுக்குத் துன்பம் செய்யும் தவறுகளும் உண்டு. சிலர் போத்தல்களைத் தெருவில் போட்டு உடைத்தாலும் பொறுக்கி எறிவதில்லை. பலர் வாழைப் பழத்தைச் சாப்பிட்டுவிட்டுத் தோலை வழியில்தான் போடுகிறார்கள். கண்ணாடித் துண்டுகள் காலிற் குத்தும்; வாழைப்பழத் தோலிற் பலர் வழுக்கிவிழுவார்கள்.

இப்படியான தப்பொன்றைக் குப்பன் என்னும் பையன் செய்தான். அதனால் நடந்ததென்ன? என்பதைப் பாட்டாகவே கேளுங்கள்.

குப்பன் என்னும் பையன் – ஒரு
குறும்புக் காரப் பையன்
தப்பும் தவறும் செய்வான் – தினம்
சார்ந்து லரை வைவான்.

குப்பன் என்னும் பையனுக்குக் குறும்பு செய்வதுதான் தொழில். எப்போதும் நல்ல மனிதரைத் திட்டுவான். பெரிய மனிதரைக் கேலி செய்வான். மற்றவர் மாமரத்தில் மாங்காய்களைத் திருடுவான். பெற்றோர் சொற்களைக் கேட்கமாட்டான்,

ஒருநாள் அவன் செய்த குறும்புத்தனம் என்ன தெரியுமா?

வாழைப் பழத்தைத் தின்றான் – தோலை
வழியிற் போட்டுக் கொண்டான்
பாழும் குப்பன் தந்தை அந்தப்
பாதை வழியே போனார்.

தகப்பனாரிடம் அழுது மன்றாடி ஐந்து சதம் வாங்கினார். அந்த ஐந்து சதத்துக்கும் வாழைப்பழங்கள் வாங்கிச் சாப்பிட்டான். வாழைப்பழத்தின் தோலை வழியிலே போட்டான். யாராவது அந்த வழியாய் வந்து அந்தத் தோலிலே சறுக்கி விழுந்தால் "ஆஹாஹா..." என்று சிரிக்கலாம் என நினைத்தான். பாவம், அவன் தந்தைதான் அந்தப் பாதை வழியாக வந்தார். அப்புறம் அவன் நினைத்தபடியே தான் விஷயம் நடந்தது.

தோலிற் சறுக்கி விழுந்தார் - பெரும்
துடுக்கன் செய்கை யாலே.
காலும் நொண்டி யானார் - அவர்
கண்ணீர் விட்டே அழுதார்.
தந்தை சொல்லைக் கேட்டான் - கொடுந்
தவறு செய்த குப்பன்
சிந்தை நொந்து இனிமேல் - நான்
செய்யேன் குறும்பு என்றான்.

பல நாள் சென்றபிறகு குப்பன் தான் செய்த பிழையைத் தந்தையிடம் கூறி மன்னிப்புக் கேட்டான். அத்துடன் நிற்கவில்லை. அன்று முதல் அவன் ஒரு குறும்பும் செய்வதில்லை.

குழந்தைகளாகிய உங்களுக்கு நற்போதனை ஊட்டக்கூடிய பாடல் இது. வைதல், சார்தல், நோதல், ஆவி, சிந்தை, துடுக்குத் தனம், குறும்பு முதலிய புதுச் சொற்களை அறியவும் இது உதவும். சுலபமாகப் பாடக்கூடிய சந்தத்திலும் இது அமைந்திருக்கிறது.

குப்பனுடைய தந்தை அந்தச் சிறுவனின் குறும்புச் செய்கையினால் கால் நொண்டியாகி விட்டார். மகனே தந்தையின் காலை நொண்டியாக்கி விட்டான். விளையாட்டு வினையாகி விட்டது. தந்தை வீட்டில் இருந்தபடியே திட்டத் தொடங்கி விட்டார். படு பாவிப் பயல்! படுபாவிப்பயல்..." என்று திட்டினார். தன் மகன்தான் இப்படிச் செய்தான் என்று அறியாமல் திட்டினார்.

இதனைப் பாடியவர்: தணிகை உலகநாதன் என்னும் குழந்தைக் கவிஞராவர். அவருடைய நூல் 'பாடும் பாப்பா'. இந்த நூலில் இன்னும் சில பாடல்கள் குழந்தைகளுக்கு ஏற்றவையாக உள்ளன.

# பாலர் பூசை

எங்கள் வீட்டு முற்றத்தின் ஒரு பக்கத்திலே பத்துப் பிள்ளைகள் விளையாடுகின்றார்கள். என்ன விளையாட்டுத் தெரியுமா? கோவில் கட்டித் திருவிழா நடாத்தும் விளையாட்டுத்தான். இரண்டு நாளைக்கு முன்தான் எங்கள் ஊர்க் கோவிலிலே திருவிழா நடந்து முடிந்தது. அதை இந்தச் சின்னஞ்சிறு பையன்கள் கண்டுகளித்தார்கள். அங்கு நடந்தவற்றை அப்படியே இங்கு விளையாடுகிறார்கள். நல்ல விளையாட்டு, அதை ஏன் நாம் தடுக்க வேண்டும். விளையாடட்டும். நன்றாக விளையாடட்டும்.

எப்போதும் படி, படி என்று நெருங்கி இந்தப் பிள்ளைகள் கற்பனா சக்தியை இழந்து விட்டார்கள். சில பிள்ளைகள் சிறு வயதிலேயே பாவைப் பிள்ளைகளை வைத்து கல்யாணவீடு நடாத்தி விளையாடுகிறார்கள். சிலர் சிரட்டை, ஊமல், கல், இலை இவற்றை வைத்து வீடு கட்டிக் குடும்பம் நடத்தி விளையாடுகிறார்கள் இவற்றிலும் பார்க்கக் கோவில் பூசை என்பவை உயர்ந்தல்லவா? எனவே நல்ல குழந்தை விளையாட்டுக்களை நாம் தடுக்கக் கூடாது. நன்றாக விளையாட வேண்டும்.

இளைய, தம்பிப் பையன் அண்ணனைப் பார்த்து இன்றைக்கு விடுமுறை நாளல்லவா? என்ன விளையாட்டு விளையாடலாம் என்று கேட்கிறான். அண்ணன் பதில் சொல்கிறான்:-

தம்பி நாங்கள் கோயில் கட்டிச்
    சாமி ஒன்றை உள்ளே வைத்து
கும்பிட் டிங்கு பூசை செய்வோம்
    கூடி ஆடிப் பாடிக் கொள்வோம்

அண்ணன் கோவில் கட்டிப் பூசை செய்து விளையாடுவோம் என்றதும் அந்தப் பையன்களின் உற்சாகத்தைப் பார்க்க வேண்டுமே. நானே ஐயர் என்கிறான் ஒருவன். நானே மேளம் என்கிறான் மற்றொருவன். பக்கத்திலிருந்த சிறிய தடியொன்றைத் தோளிலே வைத்துக் கொண்டு நானே நல்ல காவடியாட்டம் ஆடப் போகிறேன் என்கிறான் இன்னொருவன். உற்சாக மிகுதியினால் ''தான தான தந்தன தான'' என்று பாடவே தொடங்கி விட்டான். வேறொரு பையன். அந்த இடம் சிரிப்பும் கும்மாளமும் நிறைந்து காணப்படுகிறது. உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது.

நானே ஐயர் நானே மேளம்
நானே நல்ல காவடி யாட்டம்
தான தான தந்தன தான
தான தான தந்தன தான.

அண்ணன் தடிகள், கிடுகுகள் கொண்டு வந்து பந்தல் போடு கிறான். சுறுசுறுப்பாக இலை, பூக்கள் இவற்றால் அலங்கரிக்கிறான். வீட்டில் இருந்த முருகன் படத்துக்கு மாலை போட்டு முடிக்கிறான் இன்னொரு பையன். வாழை மடலிலே சப்பரம் கட்டுகிறான். அந்தச் சப்பரத்தைத் தூக்கத் தடிகள் கூடக் கட்டி விடுகிறான். முருகன் படம் சப்பரத்தில் வைக்கப்படுகிறது. எங்கும் மகிழ்ச்சி! எங்கும் ஆரவாரம்!!

நானே மேளம் என்று சொன்ன பையனைப் பாருங்கள். எங்கோ இருந்து ஓட்டை வாளி ஒன்றைக் கொண்டு வந்து எதுவிதமோ கயிறு கட்டித் தோளிற் போட்டு ''டும் டும்'' என்று அடிக்கிறான். மற்றொரு பையன் பனை ஓலையில் குழல் உண்டாக்கி ஊதுகிறான். மேளமும் நாதசுரமும் வெளுத்து வாங்குகின்றன. ''குமுக்காக் கணபதியும் குழல் அண்ணாச் சாமியும்'' தோற்றார்கள் இவர்களிடம். அண்ணன்தான் ஐயர். பூணூல் போட்டு திரிபுண்டரமாக விபூதி பூசி ஏதோ மந்தி ரங்களை முணுமுணுக்கிறான். சுவாமி புறப்பட்டு விட்டார். பாட சாலையிற் படித்த ''மந்திரமாவது நீறு'', ''சொற்றுணை வேதியன்'' என்பவை பஜனையாகப் பாடப்படுகின்றன.

ஓட்டை வாளி நல்ல மேளம்
ஓலைச் சுருளே நாத சுரம்
பாட்டுப் பாடிப் பஜனை செய்வோம்
பக்தி யோடும் பூசை செய்வோம்

மேள தாளங்களுடன் சுவாமி புறப்பட்டு விட்டார். நாலு சிறு வர்கள் சுவாமியை ஆடாமல் அசையாமல் தூக்குகிறார்கள். வீட்டின் நான்கு புறமும்தான் சுவாமி வலம் வரும் வீதி. ஒவ்வொரு வீதியி லும் குறிப்பிட்ட இடங்களில் சுவாமி நிற்கிறது.

மேளச் 'சமா' நடக்கிறது. பஜனை ஒலிக்கிறது. எவ்வளவு பக்தி! எவ்வளவு பரவசம்!!

நாட்டு மேளம் நன்கு கொட்ட
நாலு சிறுவர் சாமி தூக்க
வீட்டைச் சுற்றி வீதி வருவோம்
வேண்டிய வரங்கள் சாமி தருவார்.

குழந்தைப் பாடல்களில் இது ஒன்று. இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக யாழ்ப்பாணப் பாடசாலைகளின் குழந்தைகள் வாயில் தவழ் கிற ஒன்றே இதன் பெருமைக்குப் போதும். இதன் ஆசிரியர் புகழ் பெற்று மறைந்த 'யாழ்ப்பாணன்.'

# ஈயும் சிறுவனும்

'சுத்தம் சுகம் தரும்' என்பது ஒரு பழமொழி. தம்பி தங்கை களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் சுத்தமாக இருத்தல் வேண்டும். காலையில் எழுந்தவுடன் பல் துலக்கி முகங் கழுவுதல் வேண்டும். பின் ஸ்நானம் செய்து தூய உடை அணிந்து பாடசாலைக்குச் செல்லு தல் வேண்டும். உங்கள் புத்தகங்களை அழுக்குப் படியாமல் வைத் திருத்தல் வேண்டும். அழுக்கான உடையணிந்து அசுத்தமாக இருக்கும் பையனை யாரும் விரும்பமாட்டார். அவனைப் படிப்பிக் கும் ஆசிரியர் விரும்பமாட்டார். அவனோடு கூடி விளையாடக்கூட ஒருவரும் விரும்பமாட்டார்.

நல்லூர் என்னும் ஊரிலே செல்லத்தம்பி என்னும் சிறுவன் இருந்தான். அவன் தாய் தந்தையரின் சொல்லைக் கேட்கமாட்டான். பள்ளிக்கூடத்துக்குப் போகமாட்டான். எந்த உணவைக் கொடுத் தாலும் சாப்பிடமாட்டான். செல்லப்பிள்ளை அவன். அவன் ஒரு நாளும் குளிப்பதில்லை. நல்ல உடைகளை அணிந்துவிட்டாலும் உடனே அழுக்காக்கி விடுவது அவன் வேலை. தலையைச் சீராக வாருவதில்லை. நகத்தை ஒழுங்காக வெட்டுவதில்லை.

இந்தச் செல்லத்தம்பியை யார்தான் விரும்புவர்? அவனோடு விளையாட யாரும் விரும்பவில்லை. அவனைத் தூரத்தே கண்டா லும் எல்லோரும் ஓடி ஒளித்துக் கொண்டனர். பாவம் செல்லத்தம்பி. அவன் ஒரு நாள் தனக்கு நேர்ந்த அவமானத்தைச் சொல்கிறான் கேளுங்கள்:

பச்சைக் கிளியை வாஎன்றேன்<br>
பக்கம் வரவும் மறுத்ததுவே

ஆட்டுக் குட்டியை வாஎன்றேன்<br>
அதுவும் துள்ளி மறைந்ததுவே

கன்றுக் குட்டியைத் தொடச்சென்றேன்<br>
கட்டை அறுத்து ஓடியதே.

அவனோடு ஒத்த வயதுடைய பிள்ளைகள் விளையாட மறுத்து விட்டார்கள். அவன் பச்சைக் கிளியை விளையாட வரும்படி கேட்டான். அதுவும் மறுத்துவிட்டது. ஆட்டுக் குட்டியைக் கேட்டான். அதுவும் மாட்டேன் எனத் தலையாட்டியது. பசுக்கன்றைப் பரிதாபத் தோடு கேட்டான்; தொடச் சென்றான். அது போ போ என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டது.

பச்சைக்கிளியும் பசுக்கன்றும் ஆட்டுக்குட்டியும் மறுத்துவிட்டன. ஆனால் அவனோடு விளையாட ஒரு பிராணி சம்மதித்தது. அது ஓர் ஈ. அவனுக்கு வெகுபுளுகம். அவன் மகிழ்ச்சியோடு ஈயைக் கேட்கிறான்.

ஈயே நீதான் என்னுடனே
இணைந்தே ஆட வந்ததுமேன்?

ஈ சொன்ன பதில் அவனைத் திடுக்கிட வைக்கிறது. அவன் மகிழ்ச்சி எல்லாம் எங்கேயோ பறந்துவிட்டது. ஈ சொல்லிய பதிலை நீங்களும் கேளுங்கள்:

அசுத்தம் எங்கே இருக்கிறதோ
அங்கே நானும் இருப்பேனே.

அசுத்த மான நண்பன்உனை
அடியேன் விரும்ப மாட்டேனோ?

இருவரும் கூடி எப்பொழுதும்
இனிதாய் ஆடி மகிழ்வோமே

ஈ சொல்லிய பதில் செல்லத்தம்பியைச் சிந்திக்க வைத்தது. அவன் ஈயைப் பார்த்துச் சொல்கிறான். அசுத்தமாக நான் இருப்பதனால் ஆனந்தமான என் தோழர்கள் என்னை விரும்பவில்லை. நோயும் நொடியும் பெருக்குகின்ற நீ என்னை விரும்புகின்றாய். மெத்த நல்லது.

நோயும் தொடியும் பெருக்குகிற
பேயே எனை விட்டோடிவிடு!
நாளும் நாளும் குளிப்பேனே
நன்றாய்த் துவைத்தே உடுப்பேனே
ஆடும் கிளியும் இனிமேலே
ஆடி மகிழ்ந்திடும் என்னுடனே!

'கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி' எனப் பச்சையாகச் சொல்லாமல் சிறு நாடகம் போல - சிறுவர் பாடி நடிப்பதற்கேற்ப இப்பாடல் அருமையாக அமைந்திருக்கிறது. நல்ல குறிக்கோளை வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல்க் கவிஞர் குழந்தைகளின் மனதில் அழுத்தமாகப் பதியவைக்கிறார். இந்த நல்ல சிறுவர் பாடலை இயற்றியவர் கவிஞர் கனகசபை. அவருடைய சிறுவர் இலக்கிய நூல் - நாளைய உலகம். காரைக்குடி அழகுப் பதிப்பகத்தார் அழகிய அட்டைப் படத்துடன் வெளியிட்டிருக்கிறார்கள். பாடலை ஒரு சேர மீண்டும் படியுங்கள்.

# அண்ணன் ஆடும் கிளித்தட்டு

எங்கள் கிராமங்களிலே முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் கூட கிளித்தட்டு மறித்தல், கிட்டிப்புள் அடித்தல், வார் ஓடுதல், கெந்தி அடித்தல் முதலிய விளையாட்டுகளைச் சிறுவரும் வாலிபரும் விளையாடுவர். ஒரு சதம் செலவுமின்றி உடல் களைக்க உற்சாகமாக விளையாடும் விளையாட்டுக்கள் இவை. பிறநாட்டு நாகரிகம் வந்தபின் கால்பந்து, கைப்பந்து, இரிக்கட் போன்ற விளையாட்டுகள் நம் சிறுவரையும் வாலிபரையும் வசீகரித்து விட்டன. பணம் செலவுசெய்து விளையாடும் விளையாட்டுக்கள் இவை, சுதேச விளையாட்டுகளைப் பற்றிச் சிந்திப்பதே அநாகரிகம் என்ற நிலைச்கு நாம் தள்ளப்பட்டு விட்டோம். இந்த நிலை மாறவேண்டும். மாற்றியே தீரவேண்டும்.

இந்த நினைவோடு எங்கள் நாட்டுக் கவிஞர் ஒருவர் பாடுகிறார். மற்றக் கவிஞர்கள் சிந்தியாத கிளித்தட்டு என்னும் விளையாட்டைப் பற்றிப் பாடுகிறார்.

பின்னேரம் ஐந்துமணி, நல்ல வேப்பமரத்து நிழலில் பத்துச் சிறுவர்கள் கூடுகிறார்கள். நாலு தட்டுகளாகக் கோடுகள் கீறப்படு கின்றன. நடுவிலே ஒரு கோடு முள்ளி, ஐந்து ஐந்து பேராகப் பிரிந்து கொண்டார்கள். நான்கு பேர் கோடுகளில் நின்று மறிக்க தலைவர் முள்ளியில் நின்று விளையாட்டை ஆரம்பிக்கிறார்.

விளையாட்டு ஆரம்பமாகிறது. முள்ளியில் நின்ற தலைவர் நான்கு புறக் கோடுகளிலும் நடுக்கோட்டிலும் ஓடி விளையாடுகிறார். மற்ற நால்வரும் இறங்குகிற ஐவரையும் மறிக்கிறார்கள். ஒவ்வொருவருக் கும் எதிராக ஒவ்வொருவர் நின்று மறிக்கிறார்கள்.

கந்தையா இறங்கி விளையாடுபவர்களில் ஒருவன். பொன்னையா அவன் தம்பி. வேப்பமரத்தின் நிழலில் நின்று அண்ணனின் விளையாட்டைப் பார்க்கிறான். சந்தோஷப் படுகிறான். அந்தச் சந்தோஷத்தில் துள்ளிக் குதிக்கிறான்; பாடுகிறான்.

கிளித்தட் டாடும் அண்ணனைக்
கிட்ட நின்று பார்க்கிறேன்.

அண்ணன் எப்படியெல்லாம் விளையாடுகிறான் என்பதைத் தம்பி அடுக்கிக் கூறுகிறான்:

உன்னி உன்னி உச்சுறார்!
உச்சி உச்சிக் குத்துறார்!
முன்னும் பின்னும் திரும்புறார்!
மூலை வந்து தாவுறார்.

இவை மாத்திரமா? ஆளை உற்றுப் பார்த்து அலுப்புப்போல நடித்து, காளை போலக் குதித்து என்ன வெல்லாமோ செய்து பார்க்கிறார். வாய்க்கவில்லை, காரணம் நடுக்கோட்டிலே முள்ளியிலே தலைவர் அண்ணனை மறித்து நின்றதுதான் அரைவாசித் தட்டிலே அவரால் விளையாட முடியுமா? என்ன? முள்ளியில் நின்ற தலைவர் அடுத்த தட்டுக்குப் போய் விட்டார். கந்தையாவுக்கு வெகு புழுகம். ஒரே உச்சலில் உச்சிவிட்டார்.

கந்தையா ஒரே உச்சலில் போனது தம்பி பொன்னையாவுக்கு மகா சந்தோஷம். அந்தச் சந்தோஷத்தில் பாடுகிறான்.

துள்ளி ஓடத் துணிந்தவர்
முள்ளி ஓடக் கண்டதும்
தள்ளி நின்று பார்க்கிறார்
தட்டி உச்சிப் பழுத்தனர்,

பழம் என்றால் வெற்றி முழுவெற்றியல்ல பாதிவெற்றி இறுதிக் கோட்டுக்கு அப்பாலே போனால் பாதிவெற்றிதான். அப்பால் நடந்ததையும் தம்பி பாடக் கேட்போம்,

ஒதுங்கிக் காய்கள் நின்றன!
ஓட்டம் அண்ணர் பிடித்தனர்
பதுங்கி மறிக்க வந்தவர்
பதறச் சுழல ஆடுறார்.

தன்னை மறித்தவரைக் குத்திக் குதித்து ஏமாற்றி வென்று விட்டார். அப்பாலும் அபாயம் காத்திருக்கிறது. அதையும் அண்ணன் வென்று விட்டதாகத் தம்பி பாடுகிறான், கைதட்டுகிறான்.

காத்து முள்ளி நிற்குது
கையை நீட்டிப் பார்க்குது
பார்த்து அண்ணர் உச்சுறார்
பழமும் கரையிற் சேர்ந்ததே.

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் பாடல்களை ஒன்று சேரப் பாருங்கள்.

கவியரங்குகளிற் புகழ்பெற்றவரும், இலக்கிய உலகில் சிட்டுக்குருவி, கீரிமலையினிலே, ஏனிந்தப் பெருமூச்சு என்ற கவிதை நூல்களை ஆக்கியவருமாகிய கவிஞர் வி. கந்தவனத்தின் குழந்தைப் பாடல் இது.

# காற்று மாமா கருணை செய்குவீர்

ஓர் ஏழையின் குடிசையில் எரிந்து கொண்டிருந்த ஒரு சிறிய 'குப்பி' விளக்கு காற்றுடன் பேசியது பேசியதா? இல்லை மன்றாடியது. செல்வர்வீட்டு மின்சார விளக்கென்றால் காற்றை இலட்சியமே செய்யாது. காற்றைப் பார்த்து 'எப்படிச் சுகம்'? என்றுகூடக் கேட்டிருக்கும். இதுவோ ஏழை வீட்டு விளக்கு. 'குப்பி' விளக்கு. காற்றுக் கொஞ்சம் பலமாக வீசினாலும் அணைந்துபோகக்கூடிய விளக்கு ஆனபடியால் உறவுமுறை கூறிப்பேசத் தொடங்குகிறது.

காற்று மாமா காற்று மாமா கருணை செய்குவீர்
ஏற்றி வைத்த சோதி என்னை ஏன் அணைக்கிறீர்?

சின்னஞ்சிறு குடிசை இது. நான் அதிக நேரம் எரியக்கூடப் போவதில்லை. எண்ணெய் வாங்க இந்த வீட்டு ஏழைப் பெண்ணிடம் காசுகூட இல்லை. கொஞ்சநேரம் தான் எரியப்போகிறேன். என் பொன்னிறத்துச் சுடரினாலே சிறிது நேரம் இக்குடிசையைப் பொலியச் செய்வது கூட உனக்குப் பிடிக்கவில்லையா? போகட்டும், எனக்காகவேண்டாம். அந்த ஏழைச் சிறுவனைப் பார். சின்னஞ்சிறு பையன். ஏழையாய் இருந்தாலும் படிப்பில் எவ்வளவு ஊக்கம்? படித்து முன்னேற வேண்டும் என்று எவ்வளவு ஆர்வம் அவனுக்காகவாவது என்னை அணைத்துவிடாதே என்று விளக்கு மீண்டும் மன்றாடுகிறது.

ஏழைச் சிறுவன் என்னை நம்பிப் பாடம் படிக்கிறான்
ஏழும் மூன்றும் பத்து என்று எழுதிக் கூட்டுறான்.

அந்தச் சிறுவனின் தாயைப் பார். மகனின் படிப்பிலே அகமகிழ்ந்து காலை நீட்டி ஒய்யாரமாக அமர்ந்திருக்கிறாளா? ஐயோ! பாவம். அவள் தினக்கூலி. அன்றாடம் ஏதாவது கூலிவேலை செய்தால்தான் பசியைப் போக்க முடியும். தன் குழந்தையைக் காப்பாற்ற முடியும். பகல் முழுவதும் பாடுபட்டுக் கூலிகொண்டு இப்போதுதான் வந்தாள். தேகம் முழுவதும் ஒரே அலுப்புத்தான்; என்றாலும் மகனின் பசியை நினைத்தவுடன் அலுப்பெல்லாம் போய்விட்டது. பானையை வைத்துக் கஞ்சி காய்ச்சத் தொடங்கிவிட்டாள். அவளைப் பார், என்ன ஆச்சு? என்ன ஆச்சு? என்று அடிக்கடி பானைக்குள்ளே எட்டிப் பார்க்கிறாள் அவள் மகன்மேல் கொண்ட அன்பு அவ்வளவு? இதைப் பணக்கார வீடுகளில் உன்னாற் பார்க்க முடியுமா?

அன்னை அதோ அடுப்பை மூட்டிக் கஞ்சி காய்ச்சுறாள்
என்ன ஆச்சு என்று பானைக் குள்ளே பார்க்கிறாள்

அந்த ஏழைத் தாய் எப்படி அவதிப்படுகிறாள் பார்த்தீர்களா? அந்தச் சிறுவனும் அடிக்கடி அடுப்பைப் பார்த்தவண்ணமே இருக்கிறான், அவன் வயிற்றுள் பசி. காலையில் ஏதோ அகப்பட்டதைச் சாப்பிட்டு போன பையனுக்கு இந்தக் கஞ்சிதான் வயிறு நிரப்பும் உணவு. அதனால் தான் அடிக்கொரு தரம் அடுப்பைப் பார்க்கிறான். ஆம், ஏழையின் வீட்டில் பசிக்கும், படிப்புக்கும் போராட்டம். இது எப்போதுதான் தீரப்போகிறதோ?

படிக்குஞ் சிறுவன் வயிற்றுக் குள்ளே பசி துடிக்குது
அடிக்கொரு தரம் அவனது முகம் அடுப்பைப் பார்க்குது.

காற்று மாமா நான் நிலைமையைத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். கொஞ்சமாவது இரக்கம் காட்டு, அவள் கஞ்சிப் பானையை இறக்கிவிட்டாள். பையனும் குடிக்க ஆயத்தமாகிவிட்டான்.

காச்சுங் கஞ்சி குடிக்க வெளிச்சம் காட்ட வேண்டாமா?
ஆச்சு இதோ ஆச்சு என்னை அணைத்து விடாதே.

விளக்கின் வேண்டுகோளாகிய இந்த ஐந்து பாடலையும் ஒரு சேரப் பாடிப்பாருங்கள். ஏழ்மையை விளக்கின் மூலம் உருக்கமாகக் காட்டிய கவிஞரின் பெயர் கிருஷ்ணநம்பி. அவரது நூல் யானை என்ன யானை?

★★

# பலூன்காரன்

நீங்கள் ஒவ்வொருவரும் திருவிழாக் காலங்களில் கோவிலுக்குப் போகிறீர்கள்; பக்தியுடன் சுவாமியைக் கும்பிடுகிறீர்கள்; நல்லகாரியம் தான். அதன் பிறகு சில பிள்ளைகள் கடைகளைப் பார்க்கப் போகிறார்கள் பெண்பிள்ளைகளுக்குக் காப்பு வாங்க வேண்டும் என்று ஆசை தோன்றும். குழந்தைகள்தானே, வாங்கிக் கொள்ளட்டும் என்று பெற்றோரும் விட்டுவிடுவார்கள். ஆண் பிள்ளைகள் என்ன வாங்குவார்கள்? அநேகமான பிள்ளைகள் பலூன்தான் வாங்குவார்கள். அதிலே அவர்களுக்கு ஒரு ஆசை. அது 'அம்மம் . . . மா' என்று கத்துவதைக் கேட்பதில் ஒரு மகிழ்ச்சி. அது கொஞ்ச நேரத்தில் 'படார்' என்று உடைந்து விடும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனாலும் அதை 'வாங்கித்தா' என்றே அழுகிறார்கள்.

பலூன் விற்பவனைச் சுற்றி ஒரே கூட்டம். எல்லாம் சின்னஞ்சிறு பையன்கள்தான். அவன் பச்சை, சிவப்பு, நீலம் எனப் பல நிறத்தில் பலூன்களை ஒரு தடியில் கட்டி வைத்திருக்கிறான். சில பந்து போன்றவை; சில பாம்பு போன்றவை; சில கத்தரிக்காய் போல நீளும். இப்படிப் பலவகை. அவன் நல்ல வாய்காரன், உங்களை மருட்ட அவன் பாடுவான்; ஆடுவான். அவன் பாடிய ஒரு பாட்டைக் கேளுங்கள்.-

ஊதுதம்பி பலூன் ஊது தம்பி - இதை
உன்மனம் போலவே ஊதுதம்பி
பாதிவழி ஊதிப் பார்க்கையிலே இது
பந்தினைப் போலவே ஆகுந்தம்பி.

ஆம். அவன் உனக்கு பலூன் விற்பதற்காக, ஆசை காட்டிப் பாடுகிறான். நீ வாங்கினால்தானே உன் மனம்போல ஊதலாம். "சுருங்கி இருக்கும் பலூன் பந்தினைப் போல ஆகும் பார் பார் என்று அவன் ஆசை காட்டுகிறான். நீயும் மடியுள் தடவிக் காசை எடுத்து விட்டாய் அவன் தன் காரியத்தில் - வியாபாரத்தில் கவனமாய் இருக்கிறான்.

ஐந்து சதமிதில் ஒன்று தம்பி - உன்தன்
ஆசையைப் போல மேல் ஏறுந்தம்பி
முந்தி வந்தே ஒன்றை வாங்கும் தம்பி
முற்றும் இப்போ விலை போகுந்தம்பி.

விலையைச் சொல்லிவிட்டான். ஒன்று ஐந்து சதம். அதனோடு அவன் நிறுத்தவில்லை. காற்றை ஊதி நூலில் கட்டி விட்டுப்பார். மேலே மேலே ஏறும் என்கிறான். எங்களுக்கு இருக்கும் ஆசையை

போல அதுவும் மேலே ஏறும் என்றும் சொல்கிறான், விளங்குகிறதா? மனிதர்களுக்குப் பல ஆசைகள் உண்டு, சிலருக்குப் பண ஆசை; சில ருக்கு நில ஆசை, சிலருக்கு உத்தியோக உயர்வில் ஆசை; சிலருக்குப் புகழில் ஆசை. இந்த ஆசைகளுக்கு முடிவே கிடையாது. அதுபோல இந்தப் பலூனும் ஏறும் என்கிறான். நூலை விட விட, மேலே மேலே ஏறும் என்கிறான். 'போனால் கிடையாது, பொழுதுபட்டால் கிட்டாது' என்று சொல்பவர்களைப் போலத்தான் இவனும் முடிக் கிறான். 'முந்திவந்தே ஒன்றை வாங்கு தம்பி இவை முற்றும் இப்போ விலைபோகுந் தம்பி' என்பது அவன் ஆசை வார்த்தை.

நீ ஐந்து சதத்தை எடுத்து ஒரு பலூன் தரும்படி கேட்கிறாய். அவன் பத்துச் சதம் தா தம்பி மூன்று தருகிறேன் என்கிறான். இது என்ன கணக்கு? ஐந்து சதத்துக்கு ஒன்று என்றால் பத்துச் சதத்துக்கு இரண்டல்லவா? ஆனால் இது பெருக்கல் கணக்கல்ல. தந்திரமான வியாபாரம். அவன் சொல்கிறான்.

பத்துச் சதத்துக்கு மூன்று தம்பி – நல்ல
பஞ்ச வண்ணங்களில் வாங்கு தம்பி
எத்தனை வேண்டுமோ சொல்லுதம்பி – இதோ
எண்ணிப் பணம் தந்து வாங்குதம்பி.

பஞ்ச வண்ணம் என்றால் ஐந்து நிறம். வாங்கும்போது ஒரே நிறமுள்ள பலூனாக வாங்காமல் பல நிறங்களில் வாங்கும்படி கூட அவன் சொல்கிறான். ஐந்து சதத்துக்கு ஒன்று வாங்க நினைத்த நீ, பத்துச் சதத்துக்கு மூன்று என்ற உடனே பத்துச் சதத்தையே எடுத்து விட்டாய். அவன் அப்பாலும் ஆசை காட்டுகிறான், "எத்தனை வேண்டுமோ சொல்லுதம்பி இதோ எண்ணிப் பணம் தந்து வாங்கு தம்பி" இவை அவன் ஆசை வார்த்தைகள். ஆனால் உனக்கு மூன்று பலூன் போதும்; திரும்பி விடு. அதிக ஆசை வேண்டாம்.

நீ திரும்பி விட்டாய். ஆனால் அவன் உன்னை மீண்டும் கூப் பிடுகிறான். ஏதோ இரகசியமாக உனக்கு உபதேசிக்கிறான். அவன் சொன்னது எது என்று எனக்குத் தெரியும். சொல்லட்டுமா?

காற்றை அளவுடன் ஊதுதம்பி – அதைக்
கட்டுப் படுத்திநீ ஊதா விடின்
ஈற்றில் 'படா'ரென்று போகுந்தம்பி – பின்னே
என்னைக் குறை சொல்லல் தீதுதம்பி

நான் சொன்னது சரிதானே. அவன் சொன்னபடி நீ நடந் தால் பலூன் உடையாது. பலநாள் வைத்திருப்பாய். ஊதிஊதி மகிழ் வாய்.

இந்த நல்ல பாடல் உள்ள புத்தகம் 'அம்பிப் பாடல்'. ஈழத்தில் புகழ் பெற்ற 'அம்பி' என்ற கவிஞர் இயற்றியது. ஈழத்தில் வெளி வந்த குழந்தைப் பாடல் நூல்களுள் தலைசிறந்த பதிப்பாக வெளி வந்திருக்கும் நூல் இது. சுன்னாகம் வட – இல தமிழ்நூற் பதிப் பகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். ஈழத்துக் குழந்தைகள் கையில் அவசியம் இருக்க வேண்டிய புத்தகம்.

# காக்கை மகாநாடு

நீங்கள் படிக்கும் பாடசாலைகளில் மாணவர் சங்கம் நடப்பதைப் பார்த்திருப்பீர்கள். உங்களைப் படிப்பிக்கும் ஓர் ஆசிரியர் தலைமை வகிப்பார். மேல்வகுப்புப் பிள்ளைகள் அக்கூட்டத்தில் பேசுவார்கள். உங்களைப்போன்ற சிறுவர்கள் பாடுவார்கள். ஆடுவார் வார்கள், நல்ல பாட்டைக் கேட்டால் நீங்கள் கைதட்டுவீர்கள். மாணவர் சங்கம் நடக்கும் நாள் உங்களுக்குக் கொண்டாட்ட நாள்.

பாடசாலையில் மாணவர் சங்கம் நடப்பதுபோல உங்கள் ஊர் வாசிகசாலையில் பெரிய கூட்டங்கள் நடப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அக்கூட்டங்களில் வெளியூரில் இருந்து பலர் வந்து பேசுவார்கள், பாட்டுக் கச்சேரிகள் செய்வார்கள், நாடகங்கள் நடத்துவார்கள். நீங்கள் நித்திரை கொள்ளாமல் அவற்றை எல்லாம் பார்ப்பீர்கள், ஆனந்தம் கொள்வீர்கள்.

பாடசாலையில், ஊரில் கூட்டம் நடப்பதைப்போல நகரங்களில் பல கூட்டங்கள் நடக்கும். தொழிலாளர்கள் கூடுவார்கள், ஆசிரியர்கள் கூடுவார்கள், அக்கூட்டங்களில் தங்கள் கஷ்டங்கள், சம்பள உயர்வுகள், தொழில்முறைத் திருத்தங்கள் என்பவைபற்றி எல்லாம் பேசுவார்கள். அரசாங்கத்திற்கு முறையிடுவர்.

மனிதர்கள் இப்படியெல்லாம் கூட்டம் நடத்துகிறார்களே, நாமும் நடாத்திப்பார்த்தால் என்ன என்று காக்கைகளுக்கு ஒரு நாள் எண்ணம் உண்டாயிற்று. அவையெல்லாம் அழகான மகாவலி கங்கைக் கரையிலே கூடின. எங்கே கூடின? யார் தலைமை வகித்தார்? என்பதை அறிய உங்களுக்கு ஆசையாய் இருக்கும் அல்லவா? பாட்டைப் படித்து அறிந்துகொள்ளுங்கள்.

''ஆற்றங் கரையில் ஓர் ஆலமரம் – அங்கு
ஐம்பதி னாயிரம் காக்கை களாம் – குல
ஏற்றத்திற் காகிய மார்க்கங்கள் சாற்றிட
எண்ணற்ற பண்டிதக் காக்கைக ளாம்''.

அந்தக் காக்கை மாநாட்டுக்கு, கார்வண்ணன் என்ற காக்கை தலைமைவகிக்கச் சொற்பொழிவுகள் ஆரம்பமாயின. அவை பேசிய பேச்சுக்கள் சுவையானவை. சொற்பொழிவிலே பேர்பெற்ற கொடுங் கண்ணன் என்ற காக்கை ஆவேசத்துடன் பின்வருமாறு பேசியது.

செத்த எலிகளைத் தூக்க வேண்டாம் – வீதி
சிந்திய எச்சிலைக் கிண்ட வேண்டாம் – தெருச்
சுத்தமாக்கும் தொழில் செய்யா தொழிந்துநம்
தோட்டிப் பட்டத்தினை ஓட்ட வேண்டும்.

'தோழர்களே! கிளி, குயில், புறா முதலிய பட்சிகள் எங்களைக் கேலி செய்கின்றன. நாம் செத்த எலிகளைத் தின்கிறோமாம்; வீதியில் கிடக்கும் எச்சில்களை உண்கிறோமாம். தெரு சுத்தமாக்க அழுக்குகளைப் புசிக்கிறோமாம். சீ இது என்ன வெட்கக்கேடு. இனி எமது இனம் இவற்றைச் செய்யக்கூடாது எனச் சபதம் செய்து கொள்ளவேண்டும்.

கொடுங்கண்ணனை அடுத்து 'அண்டங்காக்கை' ஒன்று அழுது வடியும் குரலில் பேசியது:-

மானிடர் போற்றும் அறிவு பெற்றாலும் - நம்
மத்தியிலே ஓர்குறை பாடுஉண்டு - பெருங்
கானில் உறைகின்ற கள்ளக் குயில்முட்டை
காத்து வளர்த்து ஏமாறு கின்றோம்.

என்இனச் சோதரர்களே! ஏமாற்றுவதிலும் புத்திக் கூர்மையிலும் பேர்பெற்றது எங்கள் இனம். மனிதர்களே எங்களைப் புகழ்ந்து கூறுகிறார்கள். அப்படியிருக்க இந்தக் கள்ளக்குயில் எங்களை ஏமாற்றிவிடுகிறது பார்த்தீர்களா? அதுதான் கூடுகட்டாமல் எங்கள் கூடுகளிலே முட்டை இட்டுவிடுகிறது. அதை நாம் அடைகாக்கிறோம். இது எவ்வளவு அவமானம்? இனிமேல் இப்படி நேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அண்டங்காக்கை பேசியபின் வள்ளி மலைக் காக்கை ஒன்று சிறகுதட்டிப் பேசியது.

கள்ளப் பருந்தினைக் தோற்கடிக்கும் - வீரக்
காக்கை கரிச்சானுக் கஞ்சுவதேன் - என்று
வள்ளிமலைக் காக்கை கூறியதும் - காக்கை
வீரர்கள் மார்தட்டிக் கொண்டார்க ளாம்.

வீரமிகு காக்கை நண்பர்களே! பருந்து எங்களிலும் வலியது. ஆனால் அதை ஓடஓடக் குட்டுகிறோம், துரத்துகிறோம். ஆனால் கரிச்சான் ஒரு சிறிய குருவி. அது நம்மைக் குட்டுகிறது. துரத்துகிறது. உங்கள் வீரம் எங்கே போய்விட்டது? இனி, காக்கைச்சாதி கரிச்சானுக்கு அஞ்சவே கூடாது.

இப்படிக் காக்கை மகாநாடு கலகலப்பாக நடைபெற்று, பத்துக் காக்கைப் பெண்கள் மங்களகீதம் இசைத்து முடிவடையும் சமயம், யாரோ ஒரு குறும்புப் பையன் ஒரு சீன வெடியைக் கொளுத்திப் போட்டுவிட்டான். அந்த இடத்தில் ஒருகாக்கையையும் காணோம்.

மனிதர்கள் நடாத்தும் மகாநாட்டைப் போல காக்கை மகாநாட்டைச் சிறுவர் மனதில் பதியும்படி பாடியவர் 'ஜீவன்'. அவரது நூல் கவிதைக் கதம்பம் - இராமநாதபுரம் - புதுவயல், இந்திரா நிலையம் இதை வெளியிட்டிருக்கிறது.

# ஏழைச் சிறுமியின் ஏக்கம்

இந்த உலகத்தில் பல நாடுகளில் செல்வர்களும், வறியவர்களும் இருக்கிறார்கள். மாளிகைகளில் வாழ்ந்து பாலும் பழமும் உண்டு செல்வர்களது குழந்தைகள் வாழ்கின்றன. குடிசைகளில் ஒதுங்கி கஞ்சியும் கூழும் உண்டு வறிய குழந்தைகள் தவிக்கின்றன. பெரியவர்களுக்கு வறுமையின் காரணம் தெரியலாம். குழந்தைகளுக்குச் செல்வம், வறுமை அதன் காரணங்கள் தெரியமாட்டா.

சரசுவதி ஓர் ஏழைச்சிறுமி அவள் தாய் கூலிவேலை செய்பவள், தகப்பனாரோ இல்லை சரசு பள்ளிக்கூடம் போவதில்லை. தெருவோரத்தில் உள்ள சின்னஞ்சிறு குடிசைதான் அவள் இருப்பிடம். அவள் தென்னை மரங்களின் நிழலில் விளையாடுவாள். தெருவிலே செல்லும் பெண்கள் அணியும் சேலைகளையும் பார்ப்பாள். பல குழந்தைகளது அழகிய பாவாடை சட்டைகளைப் பார்ப்பாள். தன் கிழிந்த உடைகளையும் பார்ப்பாள். ஏக்கமடைவாள். தனக்கும் அப்படி நல்ல பாவாடை சட்டைகளைத் தன் தாய் ஏன் வாங்கித் தருவதில்லை என்று நினைப்பாள். ஆனால் தாயைக் கேட்கப் பயம். ஒருநாள் துணிந்து கேட்டுவிட்டாள். தன் மனத்திலே அடங்கியிருந்த ஆசைகள் - ஏக்கங்கள் எல்லாவற்றையும் கேட்டு விட்டாள்.

சரசுவதியின் ஏக்கங்கள் அழகிய பாடலாக வெளி வருகின்றன. அவள் தன் தாயைப் பார்த்துக் கேட்கிறாள். பசியிலும் பார்க்கப் பாவாடை சட்டைகள்தான் குழந்தையைக் கவருகின்றன. அதனால் அதைப்பற்றியே முதலில் கேட்கிறாள்.

அம்மா இங்கே வாஅம்மா
அழகாய்ச் சிறுவர் தெருவினிலே
சும்மா போவார் வருவோராய்த்
தொடர்ந்து செல்வார் பலரைப்பார்

தாய் கூலிவேலை செய்த அலுப்பில், தெருவில் பத்துப்பேர் போவார்கள், வருவார்கள். அதற்கென்ன உனக்கு' என்று கேட்கிறாள். சரசு அப்போதுதான் தன் மனக்கருத்தை வெளியிடுகிறாள்.

பட்டுச் சேலை பளபளக்க
பசும்பொன் நகைகள் கலகலக்க
மொட்டும் பூவும் கூந்தலிலே
முடித்துச் செல்வார் பலர்அம்மா
ஏன்என் தலையில் பூஇல்லை
ஏன்என் சட்டை கிழிந்திருக்கு?
போன வருஷத் தின்பிறகு
புதிய உடையும் தைத்ததில்லை.

தாய்க்கு அப்போதுதான் மகளின் ஏக்கம் தெரிகிறது. அந்தக் குழந்தை சொல்வது உண்மை. ஒரே ஒரு சட்டை அதுவும் போன வருடப் பிறப்புக்குத் தைத்த சட்டை. தாய் தங்களது வறுமையைப் பற்றிச் சொல்ல வாயெடுக்கிறாள். அதற்குள் சரசுவின் கேள்விகள் தொடரு கின்றன. உடையைப் பற்றிச் சொன்னவள் இப்போது தங்கள் குடிசை யில் உள்ள உணவைப்பற்றியே சொல்ல ஆரம்பித்து விட்டாள்.

பக்கத்து வீட்டுச் சிறுவரெல்லாம்
பலகார ரங்கள் உண்கின்றார்
மிக்க நல்ல பழத்தொடுபால்
வேண்டிய மட்டில் புசிக்கின்றார்

ஏன்எம் வீட்டில் பால்இல்லை
இட்டலி தோசை வகைஇல்லை
பானம் பருக ஒன்றுமில்லை
பச்சைத் தண்ணீர் குடிப்பதல்லால்

கஞ்சி யொருநாள் கூழொருநாள்
காய்கறி யோடு சோறொருநாள்
மிஞ்சும் ஒருநாள் வெறுஞ்சோற்றை
மென்று தின்பதும் ஏனம்மா?

''பானம் பருக ஒன்றுமில்லை, பச்சைத் தண்ணீர் குடிப்பதல்லால்'' என்ற வரிகளும். ''மிஞ்சும் ஒருநாள் வெறும் சோற்றை மென்று தின்பதும் ஏனம்மா?'' என்ற வரிகளும் வறுமையின் கோரநிலையை எடுத்துக் காட்டுகின்றன. இப்படிக் கேட்ட குழந்தைக்குத் தாயால் ஒரு பதில்தான் சொல்ல முடியும். அவர்கள் செல்வார்கள். நாங்கள் வறியவர்கள், அவர்களைப் போல எங்களால் வாழ முடியுமா? என்பதுதான் பதில். அதையே அந்தத் தாயும் சொல்கிறாள்,

கூலி வேலை செய்துனக்கு
கூழும் சோறும் தருகின்றேன்
மேலோர் போல நாமிருக்க
விரும்ப லாமா? கண்மணியே

மாதமுடிவில் சம்பளத்தை
வாங்கி வரும் போதுனக்குப்
போது மான தின்பண்டம்
புதிய சட்டை தந்திடுவேன்.

வறுமையை வேறொரு கோணத்தில் சித்திரிக்கும் இந்தப் பாடலை எழுதியிருப்பவர் காமாட்சி ஸ்ரீநிவாசன். இப்படியான பாடல்களை இளமைப் பருவத்திலே சொல்லிக் கொடுத்தால் பிற்காலத்தில் குசேலோபாக்கியானம் போன்ற நூல்களில் வரும் பாடல்களை மாணவர் நன்கு இரசிப்பர். குழந்தைகளுக்கு ஏழைகளின்மீது இரக்க உணர்ச்சியையும் ஏற்படுத்தும். இந்த எட்டுப் பாடல்களையும் நீங்களே ஒருசேர வாசித்துப் பாருங்கள். இப்பாடல் உள்ள நூல் குழந்தைப் பாடல்கள் கிறிஸ்துவ இலக்கிய சங்கம், பார்க் டவுன், சென்னை என்பது நூல் கிடைக்கும் முகவரி.

# காக்கையக்கா! கவலைப்படாதே!!

சில குழந்தைகளுக்குத் தங்கள் மனதிலே உள்ள சிறுகுறை ஒன்றைப் பற்றிச் சொல்லப் போகிறேன். எங்கள் வீட்டுப் பெண்குழந்தையாகிய திலகவதிக்கும் அந்த மனக்குறை இருக்கிறது. அந்தக் குறை என்ன தெரியுமா? தான் கறுப்புநிறம் என்ற குறை தான் அது. திலகவதியின் அண்ணன் சேரன், அவளைப் பார்த்து நீ கறுப்பு வடிவாக இல்லை என்று குறும்புடன் கூறினால் போதும், அவள் அழத்தொடங்கி விடுவாள். கறுப்பாகப் பிறந்ததே ஒரு குற்றம் என்பது அவள் எண்ணம்; பெரிய மனக்குறை. இந்த எண்ணத்தை – குறையை மனத்தில் வளரவிடக்கூடாது. இந்தக் குறை மனத்தில் வளர்ந்தால் உங்களுக்குத் தெரியாமலே பொறாமையை உண்டாக்கும்; சினத்தை வளர்க்கும். வாழ்க்கையையே மோசமாக்கிவிடும்.

பறவைகளுக்குள்ளே காக்கை கறுப்புநிறம். அதற்கும் அந்தக் குறை மனத்தை அரித்தது. புறாவின் நிறத்தைக்கண்டு அது பொறாமைப்பட்டது. மயிலின் அழகைக் கண்டு அது மனம் வருந்தியது. அது ஒருநாள் மரத்திலே இருந்து கா கா என்று அழுதது. எங்கள் வீட்டுப் பெண்குழந்தையாகிய திலகவதியைப்போல அழுதது. அதை மணிவண்ணன் என்ற பையன் கண்டான். அவன் காக்கையைப் பார்த்து காக்கை அக்கா! காக்கை அக்கா! உனக்கு என்ன கவலை என்று கேட்டான். அது பதில் சொல்லியது. புறா என்னைக் கறுப்பு என்று கேலி செய்கிறது. மயிலும் சேவலும் என்னைக் கண்டால் பேசுவதேயில்லை. இதை நினைக்க எனக்கு அழுகை வருகிறது என்றது. மணிவண்ணன் அதற்குத் தேறுதல் கூறினான். கருமை நிறத்தின் பெருமையை எடுத்துக் கூறினான். கறுப்பு நிறத்தின் பெருமை என்ன என்பதை நீங்களும் அறிய ஆவல்கொள்வீர்களல்லவா? இதோ மணிவண்ணன் கூறிய பாடலை நீங்களும் கேளுங்கள்:-

காக்கை யக்கா காக்கை யக்கா கவலைப்படாதே – நிறம்
கறுத்திருக்கே என்று நீயும் கவலைப்படாதே
பார்க்கையிலே கறுப்பினுக்கே பாரில் சிறப்பு – நம்மைப்
படைத்தவனே படைத்திருக்கான் மறந்து விடாதே

திருமால் பிரமா முதலிய கடவுளர்கள் நம்மைப் படைத்துக் காக்கும் கடவுளர்கள் கறுப்பு நிறம். முழுமுதற் கடவுளாகிய சிவபிரான் கூடத் தமது கழுத்தில் கருமை நிறத்தை அழகுக்காக வைத்

திருக்கிறாரே. இவைகூட உனக்கும் தெரியாதா? கடவுளர் சக்தி களைக் கூறுகிறாயே. பூமியில் என்ன இருக்கிறதென்று கேட்கிறாயா? கூறுகிறேன் கேள்:-

வானநிறம் என்னநிறம் வந்துபாருநீ - உலகை
வளைந்த கடல் என்னநிறம் பார்த்துக் கூறுநீ
காணும்மலை என்னநிறம் கண்டுசொல்லுநீ - இவை
கண்டுதேர்ந்து தெளிந்த பின்பு கவலை கொள்ளுநீ.

வானத்தின் நிறம் என்ன தெரியுமா? கடலின் வண்ணம் என்ன பார்த்தாயா? மலையின் அழகு என்ன நிறத்தால் வந்தது உணர்ந்தாயா? எல்லாமே கறுப்பு. இவற்றை யாராவது வெறுக்கிறார்களா? பார்த்துப் பார்த்துப் பரவசம் அல்லவா கொள்ளுகிறார்கள்?

எங்கள் உடலைப் பார். அதில் சிறந்த உறுப்பு கண். கண்ணிலும்கூட நடுவில் இருக்கும் மணி சிறந்தது. கண்ணின் மணி என்ன நிறம்? உன்னுடைய நிறமாகிய கறுப்பு. இனி எந்தப் பறவை கேலி செய்தாலும் கவலைப்படாதே. நான் கூறியவற்றைக் கூறு, மனக் குறையை அகற்று.

உடலுறுப்பில் சிறந்த தென்று
கண்ணிணைச் சொல்வார் - அந்த
உயர்ந்த கண்ணில் ஒளிரும்மணி
உன்நிற மன்றோ?
கடவுளரில் பாதிப்பேர்கள் கறுப்பர்தானம்மா - அதால்
கவலைவிட்டு இப்போநீயும் களிப்புக்கொள்ளம்மா.

காக்கைக்குக் கூறியதுபோல, கவலைகொள்ளும் சிறுகுழந்தைகளின் மனக்கவலையை அறிந்து பாடிய கவிஞர் ரா. பொன்ராசன் அவரது கவிதைநூல் பாப்பாப்பாட்டு. நல்ல பல குழந்தைப் பாடல்கள் அடங்கிய இந்த நூலை அழகுப் பதிப்பகம் - காரைக்குடி வெளியிட்டிருக்கிறது.

★ ★ ★

# நல்ல உபாத்தியாயர்

அன்புள்ள தம்பி தங்கைகளே! நீங்கள் ஒவ்வொருவரும் பாடசாலையிற் படிக்கின்றீர்களா? நல்லது. பள்ளிக்கூடத்துக்கு ஆசையோடு மகிழ்ச்சியோடு போகிறீர்களா? அல்லது அழுது கொண்டு அடிவாங்கிக்கொண்டு போகிறீர்களா? அழுதுகொண்டு போகும் பிள்ளைகள் கூடாதபிள்ளைகள். அவர்களுக்குப் படிப்பு என்றால் கசப்பு, பாடசாலை என்றால் சிறைச்சாலை என்பது அவர்கள் எண்ணம்.

அவர்களின் எண்ணத்துக்குச் சில ஆசிரியர்களும் பொறுப்பு. சிறு தவறுகளுக்கெல்லாம் அடிக்கும் உபாத்தியாயர்கள் இருக்கிறார்கள். கைகட்டு வாய்பொத்து என்று பயப்படுத்தும் உபாத்தியாயர் இருக்கிறார். 'அடியாத மாடு படியாது' என்று சொல்லிக் கடும் தண்டனைகள் கொடுப்பவர்கள் இருக்கிறார்கள். இவர்களால்தான் பிள்ளைகள் பாடசாலைக்கு வர அழுகிறார்கள், பயப்படுகிறார்கள்.

ஆனால் பெரும் பாலான உபாத்தியாயர்கள் இப்போது அப்படி இல்லை. அன்போடு படிப்பிக்கிறார்கள். ஆதரவுகாட்டி அணைக்கிறார்கள். பாட்டும் கதையும் கூத்துமாகப் பிள்ளைகளை உற்சாகப் படுத்துகிறார்கள். கண்ணீர் ஆகிய மழையில் பிள்ளைகளை வளர்க்காமல் ஆனந்தமாகிய மழையில் வளர்க்கிறார்கள். இதோ எங்கள் வீட்டில் இருக்கும் மணிவண்ணன் என்ற பையன் சொல்லுகிறான். தன்னுடைய பாடசாலையில் தன்னைப் படிப்பிக்கும் உபாத்தியாயரைப் பற்றிப்பாடுகிறான். நீங்களும் அவன் பாட்டைக் கேளுங்கள்:

வீட்டில் எமக்குக்
கதைகள் கூறி
விளங்க வைத்தாள் பாட்டி
கூட்டி எம்மை
நல்ல பாட்டுக்
கூறி வந்தாள் பாட்டி

மணிவண்ணன் தனது தம்பிக்கும் தங்கைக்கும் கூறுகிறான். பாடசாலை என்றால் பயமா? பயப்பட வேண்டாம். எங்கள் வீட்டில் இருக்கும் பாட்டி எங்களைக் கூட்டிவைத்து ''ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு இராசா என்று கதைகள் கூறி வருகிறார்களல்லவா? அதைப் போலத்தான் அங்கும் உபாத்தியாயர் கதைகள் பாட்டுக்கள் எல்லாம் சொல்லித் தருகிறார். பாடசாலைக்குப் போனால், அடிப்பார்கள், உதைப்பார்கள், கிள்ளுவார்கள் என்றெல்லாம் ஆசிரியர்களைப் பற்றிச் சொன்னார்கள். அதெல்லாம் பொய். எங்களுடைய தந்தையார் போலத்தான் அந்த உபாத்தியாயர். அவரிடம் அன்பு இருக்கிறது; நல்ல பண்பு இருக்கிறது; எங்கள் எல்லோரையும் அவர் தம்முடைய குழந்தைகள் போலத்தான் எண்ணுகிறார்.

பள்ளிக் கூடம் சென்ற போது
பண்பு கொண்ட ஒருவர்
துள்ளிக் குதித்துக் கையைக் காட்டிச்
சொல்லித் தந்தார் பாட்டு
நல்ல கதைகள் படங்க ளோடு
நமக்குச் சொல்லித் தந்தார்
நல்ல வாத்தி யாரெமக்கு
நாளும் தந்தை போல்வார்

வெறும் கதையும் பாட்டும் கூத்தும் படித்தால் அறிவு வளருமா? இல்லை. எண்ணும் எழுத்தும் ஒவ்வொருவரும் அவசியம் படித்தல் வேண்டும். வீட்டிலே எங்களுக்குக் கதையும் பாட்டும் தெரியும். எழுத்தும் கணக்கும் தெரியாது. எழுதத் தெரியாத எங்களுக்கு ஆறுதலாக கோபிக்காமல் அன்போடு 'அ' ன 'ஆ' வன்ன எழுதிக் காட்டினார். சொல்லித் தந்தார். அது மாத்திரமா? எனக்குப் பக்கத்தே இருக்கும் சுப்பையா குறும்புக்காரப் பையன். இடைக்கிடை எனக்குக் கிள்ளுவான். அடிப்பான், நான் அழுவேன். அழும்போதெல்லாம் என்னை அணைத்து அன்பு காட்டுபவர் எங்கள் ஆசிரியர்.

எழுதத்தெரியா எமக்கு நன்றாய்
எழுத்துஞ் சொல்லித் தருவார்
அழுதால் எம்மை அழைத்தணைத்தே
அன்புகாட்டி நிற்பார்

மணிவண்ணன் தன்னுடைய ஆசிரியரைப்பற்றிக் கூறக் கூறத் தம்பிக்கும் தங்கைக்கும் பாடசாலைக்குப் போக ஆசை வந்து விட்டது. அண்ணா அண்ணா நாங்களும் உங்கள் பாடசாலைக்கு நாளைக்கு வரட்டுமா என்று கேட்டார்கள். அவன் சம்மதித்துப் பின்வருமாறு பாடுகிறான்.

'சின்னத்தம்பி நீயும் வாடா
செல்வம் நீயும் வாடி
என்றும் மகிழ்ச்சியாயிருக்க
எங்கள் பள்ளி செல்வோம்'

வெறுப்படைந்திருக்கும் சிறுவர் உள்ளத்திலே ஆசிரியர் மேல் அன்பை வருவித்து முடியும் இடத்திலே சிறுவர் கவிதையின் உச்சத்தைத் தொடும் இக்கவிதையை இயற்றியவர் 'ஆடலிறை' இளவாலையைச் சேர்ந்த திருவாட்டி செல்வலக்குமி நடராசா அவர்களது நினைவுமலராக அவர்களது மக்கள் மழலைச் செல்வம் என்ற குழந்தைப் பாடல் தொகுப்பு நூலை வெளியிட்டிருக்கிறார்கள். அருமையான. தொண்டு. அந்த நூலில்தான் இந்தப் பாடல் இருக்கிறது. முழுப்பாடலையும் ஒருசேரப் பாருங்கள்:

# திசைகள்

அன்புள்ள தம்பி தங்கைகளே,

சென்ற பத்தொன்பது வாரங்களாகப் பலவகைப்பட்ட பாடல்களைக் கேட்டீர்கள்; வாசித்தீர்கள். அவற்றில் பல உங்களுக்கு நேர் வழி காட்டும் பாடல்கள். சில பொதுவான பாடல்கள், பலூன்காரனும் பாட்டியும் கோழிக்குஞ்சும், வெண்கட்டியும், காய்கள் கட்டிய வெருளியும் உங்களுக்கு மனமகிழ்வை ஏற்படுத்தியிருக்கலாம். இவ் வாரம் நீங்கள் உங்கள் வகுப்பிலே படிக்கும் பூமிசாஸ்திரப்பாடம் சம்பந்தமான பாடல் ஒன்றைப் படிக்கப் போகிறீர்கள். அது அறிவு சம்பந்தமான பாடல்; திசைகள் சம்பந்தமான பாடல்.

திசைகளைப்பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்பன அவை. உங்கள் ஆசிரியர் அத் திசைகள் பற்றிச் சொல்லியும் தந்திருப்பர். ஆனால் திசைகள் பற்றிப் பாடியுள்ள கவிஞர் நல்ல சந்தத்திலே கைகளையும் அவயவங்களையும் நீட்டி மடக்கி ஆட்டி அபிநயத்தோடு செய்யக்கூடிய முறையிலே இப்பாடலைப் பாடியிருக்கிறார். திசைகள் பற்றித் தெரியாத மாணவர்கள் பாடலைப் பாடி அதன்படி செய்து அறிந்துகொள்ளலாம். தெரிந்த மாணவர் பாடி மகிழலாம். திசைகளைப்பற்றி அறிந்த நான்கு மாணவர்கள் பாடுகிறார்கள். சூரியன் காலையிலே உதிக்கும் திசையைப் பார்க்கிறார்கள். கண்கண்ட கடவுள் அவன். ஆகவே அவனைக் கரம் கூப்பி வணங்குகிறார்கள். வணங்குதலோடு பாடலை ஆரம்பிக்கிறார்கள்.

காலையிலே சூரியனைக்
காணுவோம் கிழக்கிலே நாம்
காணுவோம் கிழக்கிலே கண்ட திசை நாம் வணங்கி
நின்றுகொள்வோம் பார்த்துமே – நாம்
நின்றுகொள்வோம் பார்த்துமே.

நான்கு பிள்ளைகளும் பாடி முடித்த பின்னர் மற்றப் பிள்ளைகள் அவர்கள் செய்ததுபோல் கும்பிட்டுச் சேர்ந்து பாடுகிறார்கள். ஒரு முறையல்ல மூன்று முறை. பாடலும் அபிநயமும் களை கட்டுகிறது. பாடல் மேலும் தொடர்கிறது,

பாலகர் நாம் கைககளையும்
பக்கமாக நீட்டுவோம் – நாம்
பக்கமாக நீட்டுவோம்
பார்த்திடாத முதுகின் பக்கம்
மேற்கெனவே சாற்றுவோம் – நாம்
மேற்கெனவே சாற்றுவோம்.

சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்துக்கொண்டு நிற்கும் பிள்ளைகள் பார்க்கும் திசையைக் கிழக்கு என்றும் பார்த்திடாத முதுகுப் பக்கத்தை மேற்கு என்றும் சுலபமாகச் சொல்லி, சந்தத்துடன்பாடி அபிநயத்துடன் முடித்துவிட்டார்கள். இனி இருப்பவை இரண்டு. அவை வடக்கு, தெற்கு என்பவை. அந்தத் திசைகளுக்கு என்ன கூறப்போகிறார்கள்? ஆஹா! அதையும் கவிஞர் சுலபமாகப் பாடி விட்டார்.

உணவு உண்ணும் வலது கையை
உல்லாசமாய் ஆட்டுவோம் நாம்
உல்லாசமாய் ஆட்டுவோம்
உண்மையாக அத்திசையைத்
தெற்கெனவே சாற்றுவோம் – நாம்
தெற்கெனவே சாற்றுவோம்.

அபிநயத்தோடு ஆட்டிய கை, உணவு உண்ணும் வலது கை. தெற்கு என்றவர் ஆட்டாமல் நீட்டியுள்ள கைப்பக்கம் வடக்கு என்று அறிவுறுத்துகிறார் ஆசிரியர். திசைகள்பற்றிய இந்தப் பாடலை முடிக்கும்போது அழகாக, பிள்ளைகளுக்கு ஏற்றவிதமாக முடித்திருக்கிறார் கவிஞர்.

வடக்குக் கிழக்குத் தெற்கு மேற்கு
வரிசையாகச் சொல்லுவோம் - நாம்
வரிசையாகச் சொல்லுவோம்
வந்தனங்கள் நாமளித்துப்
பின் திரும்பிச் செல்லுவோம் - நாம்
பின் திரும்பிச் செல்லுவோம்.

அறிவும், சந்தமும், அபிநயமும் ஒன்றுசேர இப்பாடலை இயற்றியவர் 'இதம்' என்ற புனைபெயரில் எழுதும் குழந்தைக் கவிஞர் வ. இளையதம்பி, குரும்பசிட்டியைச் சேர்ந்தவர். வெகு அடக்கமான இவர் கவிஞர் என்று தம்மைக் கூறிக் கொள்ளாமல் ஆரவாரமில்லாமல் 1950ஆம் ஆண்டு தொடக்கம் எழுதி வருகிறார். **மழலைவிருந்து** என்ற அவரது நூல் வெளிவரத் தயாராகிறது.

பாடல் முழுவதையும் ஒருசேரப் பாருங்கள்.